1987 மார்ச் 11]

50—

கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கு வாகனம் வழங்கல்.

வினா எண். 11651—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கு வாகனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

விடை—

கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கு ஊர்திகள் வழங்க அரசால் ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக ஊர்திகள் வழங்கப்பட்டு வருகின்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினை

முந்தைய நாள் நிகழ்ச்சிகள் குறித்து.

திரு. பொன் முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர் களே, பாயின்ட் ஆப் ஆர்டர், **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான்தான் நேற்றே சொல்லி விட்டேனே, அதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் வராது, உட்காருங்கள் (குறுக்கீடு) ** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு—(குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) நேற்றுதான் எல்லாம் எக்ஸ்பஞ்ச் பண்ணியாகி விட்டது. எல்லாவற்றையுமே எக்ஸ்பஞ்ச் பண்ணியிருக்கிறோம். (கூச்சல், குழப்பம்)** நேற்று ஏன் நீங்கள் கேட்கவில்லை ? (குறுக்கீடு) எக்ஸ்பஞ்ச் பண்ணவேண்டுமென்று சொன்னீர்கள், எக்ஸ்பஞ்ச் பண்ணி னேன். (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) என்னுடைய அறைக்கு வாருங்கள் (குறுக்கீடு) எல்லாவற்றையுமே எக்ஸ்பஞ்ச் பண்ணி யிருக்கிறோம் (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) நீங்கள்தான் அவைக் குறிப்பிலே இருக்கக் கூடாது என்று சொன்னீர்கள் ; எல்லோரும் சொன்னீர்கள் (குறுக்கீடு).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்ற பெற்றது.

[1987 மார்ச் 11

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நேற்றே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு ரூலிங் கொடுத்து விட்டார்கள்; அவைகளெல்லாம் எக்ஸ்பஞ்ச் ஆகிவிட்டன. ஆகவே உங்களுடைய ரூலிங்கை இன்றைக்கு கொஸ்டின் பண்ணுவது நியாயமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) ***

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றையதினம் எல்லாம் முடிந்து விட்டது. இவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. இவைகளையெல்லாம் அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டாம். (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று பேசிய பேச்சுகள் அத்தனையும் அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டு விட்டன என்ற உடனே எல்லாம் போய் விட்டது. அதற்குப் பிறகு எடுக்கப்பட்டவைகளைப் பற்றி கேள்வி கேட்பதோ, அதுபற்றி பிரச்சினைகளை எழுப்புவதோ சரியானதல்ல, முறையல்ல. ஆகவே, அவைக் குறிப்பில் இருக்கின்ற ஒன்றைப் பற்றி கேட்பீர்களேயானால் நல்லது. அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டவைகளைப் பற்றி மறுபடியும் கிளப்புவது என்பது சரியான முறையல்ல. அவை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டவை. . . . (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றையதினம் அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டவை—உங்கள் அனைவருடைய வேண்டுகோளுக்கிணங்க (குறுக்கீடு)——பத்திரிகையில் வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த ஆணையை மீறி பத்திரிகையில் வந்தால் அந்தப் பத்திரிகைகள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்) நேற்றேகூட இதுபற்றிக் கேட்டிருக்கலாம், (குறுக்கீடு) இவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. யாரும் என்னுடைய அனுமதியைப் பெற்று பேசவில்லை. ஆகவே அவைக்குறிப்பில் ஏற்ற வேண்டாம் (குறுக்கீடு) நேற்றே நீங்கள் சொல்லிவிட்டீர்களே (குறுக்கீடு) ——**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டதற்குப் பிறகு அந்தக் குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லை. பேப்பரில் வந்திருந்தால், மாண்புமிகு உறுப்பினர் கூறுவது உண்மையாக இருக்குமானால் அந்தப் பத்திரிகைகள் மீது தாங்கள் நடவடிக்கை எடுக்கலாம் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எழுதிக் கொடுங்கள். எந்தெந்தப் பத்திரிகை என்று எழுதிக் கொடுங்கள். நடவடிக்கை எடுக்கலாம். (குறுக்கீடு) அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு. எல்லோரும் உட்காருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.